**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064808

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 02/2020 | Date: நாள் 15.07.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 14.07.2020 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 12.15 hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.07.2020 — Time : நேரம் 15.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — AEE, TANGEDCO, Puliyangudi 70 Km North West
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — S.W.SELVIN RAJA KUMAR
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — Tr.PALPANDI
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 10.06.1968
   (d) Nationality : நாட்டினம் — INDIAN
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — TEACHER
   (g) Address : முகவரி — 23, ARASARADI VINAYAGAR KOVIL STREET, T.N.PUDUKUDI. PULIYANGUDI.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Karuppasamy, Assistant Executive Engineer, TANGEDCO, Puliyangudi, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 15.07.2020-ம் தேதி மாலை 15.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.S.W.செல்வின் ராஜாகுமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட புளியங்குடி மின்வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 15.07.2020-ம் தேதி மாலை 16.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.W.செல்வின் ராஜாகுமார், வயது 52/2020, த/பெ பால் பாண்டியன், 23, அரசரடி விநாயகர் கோவில் தெரு, T.N.புதுக்குடி, புளியங்குடி. பெறுனர் உயர்திரு. ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சேலம் மாவட்டம் தாரமங்கலம் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு T.N.புதுக்குடியில் மேரி ரைஸ் மில்லும் உள்ளது. நான் கடந்த 10.06.2019ம் தேதி கடையநல்லூர் சார்பதிவக ஆவண எண் 2484/2019ன்படி சொக்கம்பட்டி கிராம சர்வே எண்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சி.வி. செல்வின் ராஜா குமார் 15/07/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

J. Anitha 15/07/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் J. Anitha
Rank: நிலை ......................No. எண் ..........

79/1A1, 79/1D1, 79/1E, 79/2A, 81/18A, 79/2B1 ல் உள்ள 95.149 சென்ட் இடம் மற்றும் அதில் உள்ள கட்டிடம், மா, பலா, தென்னை, எலுமிச்சை போன்றவற்றை புளியங்குடியை சேர்ந்த திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி திருமதி.சாந்தா அவர்களிடம் இருந்து வாங்கினேன். மேற்படி இடத்தில் விதைப்பண்ணையும் இருந்தது. அந்த இடத்தில் மின் இணைப்பு எண் 092-001-998 ஆனது 10 H.P கொண்டதாக இருந்தது. அந்த மின் இணைப்பானது திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் பெயரில் இருந்ததை என்னுடைய பெயருக்கு அக்டோபர் 2019ல் மாற்றி விட்டேன். தற்போது மேற்படி மின் இணைப்பை 65 H.P (47 கிலோ வாட்) ஆக மாற்ற முடிவு செய்து 25.04.2020ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அதன்படி புளியங்குடி மின் வாரிய உதவி பொறியாளர் அவர்கள் என்னுடைய இடத்தை பார்வையிட்டு சென்று ரூ.24,600/- கட்ட சொன்னார்கள். நானும் 01.06.2020 அன்று ரூ.24,600/-க்கு SE/TANGEDCO/Tirunelveli என்ற பெயரில் DD எடுத்து கொடுத்தேன். அதன் பின்பு உதவி பொறியாளர், AEE திரு.கருப்பசாமி மற்றும் அதிகாரிகள் வந்து என்னுடைய இடத்தை பார்வையிட்டு சென்றனர். 25.06.2020ல் புளியங்குடி மின் வாரிய உதவி பொறியாளர் அவர்கள் எஸ்டிமேட் தொகைக்காக ரூ.43,789/- கட்ட சொல்லி நோட்டீஸ் கொடுத்தார்கள். அதன்படி நானும் ரூ.43,789/-க்கு SE/TANGEDCO /Tirunelveli என்ற பெயரில் DD எடுத்து 26.06.2020ம் தேதி கொடுத்தேன். அதற்கு EB அலுவலகத்தில் E 8021602 ரசீது கொடுத்தார்கள். அதன்பின் 11.07.2020ம் தேதி AEE திரு.கருப்பசாமி அவர்கள் அவரது செல்போன் எண் 9486428315 லிருந்து எனது செல்போன் எண் 9842510317ல் தொடர்பு கொண்டு AE வேலையை எல்லாம் நான்தான் கவனித்து வருகிறேன். உங்கள் விதைப்பண்ணைக்கு அதிக லோடு மின் இணைப்பு மாற்றி கொடுக்க டிரான்ஸ்பார்மர் மற்றும் போல் அமைக்க வேண்டியதிருக்கு, அதற்கு 20 ஆட்களை வைத்து வேலை செய்ய வேண்டும் அதனால் எனக்கு ரூ.20,000/- தரவேண்டும் என்று சொன்னார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை நேரில் வந்து சந்திக்கிறேன் என்று சொன்னேன். நேற்று 14.07.2020ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் AEE திரு.கருப்பசாமி அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்தபோது டிரான்பார்மர் வைக்க வேண்டியிருக்கு, ரூ.20,000/- எனக்கு கொடுங்கள் வேலையை ஆரம்பித்து விடலாம் என்று சொன்னார். நான் அதற்கு மின்வாரியத்திற்கு கட்டவேண்டிய பணம் எல்லாம் கட்டிவிட்டேனே என்று சொன்னேன். AEE திரு.கருப்பசாமி தான் கேட்ட ரூ.20,000/- தனக்கு தந்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார். தற்போது அவ்வளவு பணம் என்னிடம் இல்லை. ஏற்கனவே நீங்கள் கட்ட கூறிய பணம் அனைத்தையும் கட்டி விட்டேனே என்றேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் தந்தால்தான் டிரான்பார்மர் அமைத்து அதிக லோடு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும் அதற்கான வேலையையும்

துவங்க முடியும் என்று கண்டிப்பாக சொன்னார். தற்போது பணம் என்னிடம் இல்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு குறைக்க முடியாது, நான் கேட்ட பணத்தை நாளை மறுநாள் வியாழக்கிழமை கொண்டு வந்து தரும்படி சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு உதவி செயற்பொறியாளர் லஞ்சமாக ரூபாய் 20,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே இன்று 15.07.2020 தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/- கொண்டு வந்துள்ளேன். நான் அதிக லோடு மின் இணைப்பு மாற்றம் செய்வதற்காக பணம் கட்டிய ரசீதுகள் மற்றும் DD நகல் இணைத்துள்ளேன். ஐயா, என்னிடம் அதிக லோடு மின் இணைப்பு மாற்றி கொடுக்க லஞ்சம் கேட்ட உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாள்: 15.07.2020 இப்படிக்கு,sd (S.W.செல்வின் ராஜாகுமார்). 15/7/2020.

Sir, Received the complaint on 15.07.2020 at 15.00 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.02/2020 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 15.07.2020 at 16.30 hrs. sd.J.ANITHA, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

J. Anitha.
Inspector of Police,
V&AC,
Tirunelveli.
15.07.2020.